2008 ஏப்ரல் 9]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமையல் அறைகள் இப்போது படிப்படியாக நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 2 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 750 சமையல் அறைகளுக்கு எரிவாயு இணைப்புடன் Gas அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ஏறத்தாழ 3 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் பணி நியமனத் தடைச் சட்டத்தை சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள்மீதும் பயன்படுத்தி எந்த அளவுக்கு குழந்தைகள் கஷ்டப்பட்டார்கள் என்பதை நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

கால்நடை மருத்துவமனை

***26793—திரு. கு. சின்னதுரை:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, நாவக்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடந்த நிதியாண்டில் நம்முடைய தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் 40 கால்நடை மருந்தகங்களைப் புதிதாகத் தொடங்க ஆணையிட்டார்கள். அதன்படி அரசாணை எண் 136, நாள் 29-8-2007-ன்படி சேலம் மாவட்டத்தில் மட்டும் 8 கால்நடை மருந்தகங்கள் புதியதாகத் தொடங்கப்பட்டன. அதில் ஒன்று தலைவாசல் தொகுதி, நாவக்குறிச்சியிலும் புதிய கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டு, கடந்த 11-1-2008 முதல் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2008 ஏப்ரல் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னதுரை.*

திரு. கு. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், நான் கேட்டவுடனேயே இந்தப் புதிய கால்நடைக் கிளை நிலையத்தை அறிவித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியில், 35 ஊராட்சிகள் உள்ளடங்கி உள்ளன. எனது தலைவாசல் தொகுதியில், தலைமையிடமாக விளங்கும் தலைவாசலில் சுமார் 30 ஆண்டுக் காலமாக கால்நடை மருந்தகம் ஒன்று உள்ளது. அந்த மருந்தகத்தைத் தற்போது மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி உண்டா?*

திரு. கு. சின்னதுரை: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.*

திரு. தி.க. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், என்னுடைய திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாதுமலையிலே 34 மலைக் கிராமங்கள் இருக்கின்றன. அத்தனை கிராமங்களிலும் மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்கு, துணை வருவாயாக ஆடு, மாடுகளை மேய்த்து அதில் வரக்கூடிய வருவாயிலே வாழ்ந்து*

2008 ஏப்ரல் 9]

வருகிறார்கள். ஏறக்குறைய 20,000 கால்நடைகள் இருக்கின்றன, ஆனால், மருத்துவமனை கிடையாது. மருத்துவமனைக்கு வர வேண்டுமென்றால், 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருப்பத்தூர் நகரத்திற்கு வர வேண்டும். எனவே, அரசு விதியின்படி கால்நடைகளின் எண்ணிக்கை இருக்கிறது. மருத்துவமனை 40 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற காரணத்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. தி.க. ராஜா: கடந்த ஆண்டே நம்முடைய அமைச்சர் அவர்கள் மருத்துவமனையை வழங்குவதாகச் சொன்னார்கள், இன்னும் வழங்கவில்லை. முற்றிலுமாக மலைவாழ் மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் கால்நடைகளுக்கு நோய் வந்தால் இறந்து விடுகின்றன. எனவே, இந்த ஆண்டே மருத்துவமனை வழங்க அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள், என்னைச் சந்திக்கின்றபோதெல்லாம் ஜவ்வாதுமலை, ஜவ்வாதுமலை என்று மருத்துவமனையை பற்றி ஞாபகப்படுத்திக்கொண்டே இருக்கின்றார்கள். நிச்சயமாக இந்த ஆண்டு அவருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதி, மறவமங்கலம் மற்றும் நாமனூர் ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தேன். அதற்கு சில புள்ளிவிவரங்கள் சொல்லப்பட்டு, கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை என்று கடந்த முறை சொன்னார்கள். அந்தப் புள்ளிவிவரங்கள் எடுப்பதிலே தவறுகள் நடப்பதாக நான் கருதுகின்றேன். எனவே, புள்ளிவிவரங்களை எடுக்கின்ற நேரத்தில், அந்தப் பகுதியிலே

இருக்கக்கூடிய ஊராட்சிமன்றத் தலைவர் உட்பட்ட அனைவரையும் அழைத்து புள்ளிவிவரம் எடுத்தால், சரியான புள்ளிவிவரங்கள் அரசுக்கு வரும் என்ற நிலையில், நாமனூர் மற்றும் மறவமங்கலம் ஆகிய பகுதிகளில் அதிகமான கால்நடைகள் இருக்கின்ற காரணத்தாலும், அந்தப் பகுதியில் இருக்கின்ற ஏழை, எளிய விவசாய மக்கள் கால்நடைகளைப் பராமரிப்பதற்கு மிகுந்த சிரமப்படுகின்ற காரணத்தாலும், அமைச்சரவர்கள் இந்த முறையாவது அந்த இரண்டு இடங்களிலும் கால்நடை மருத்துவமனைகளைத் தொடங்க நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆயிரம் எண்ணிக்கைக்குக் குறைவாக கால்நடைகள் இருந்ததால், மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் கடந்த ஆண்டு மருத்துவமனையைத் தொடங்க இயலவில்லை. இந்த நிதியாண்டில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் கோரிக்கையை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல் 4)[@]

1—

மின் உற்பத்தி

வினா எண் 18384—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உள்ள பொது கழிவுகள்மூலம் மின் உற்பத்திச் செய்து அதே மருத்துவமனைகளில் பயன்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த நாளன்றுள்ளவாறு அமைந்தனவாகும்.